**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 10.02.2026**
**OS. No. 23/2014**
**வழக்கு சாட்சி PW.1– மலர்விழி, க/பெ.தாமரைசெல்வன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) மகாலிங்கம் மற்றும் அவரது தந்தை கண்ணுபையன் இருவரும் என்னுடைய நிலத்தை தங்களுடைய நிலம் என்று கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். என்னையும், என் பிள்ளைகளையும் பிரதிவாதிகளாக காண்பித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர். மின் வாரிய துறையினரையும் பிரதிவாதிகளாக சேர்ந்துள்ளனர். வாதிகள் எங்கள் உறவினர்களா என்றால் இல்லை. என்னுடைய நிலத்தை அவர்களுடைய நிலம் என்று விளம்புகை செய்யுமாறு பரிகாரம் கோரியுள்ளார்கள். அ.வ.எண்.215/1998 மற்றும் அவ.எண்.225/1998 என இரு வழக்குகள் எங்கள் குடும்பத்தினரிடையே நடந்தது. அது எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது, அதன் பிறகு மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, அதுவும் எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பாகி விட்டது. அதை எதிர்த்து அந்த வழக்கின் பிரதிவாதிகள் 2ம் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை.

2) மேற்கண்ட வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்கு சொத்தும், இந்த வழக்கு சொத்தும் ஒன்றே தான். மின் இணைப்பு அதிகாரிகள் ஆவணங்கள் மற்றும் அனுபவம் மற்றும் நேரடியாக சென்று ஸ்தலஆய்வு மேற்கொண்ட உரிய அறிக்கை தயார் செய்து பின்னர் தான் மின் இணைப்பு வழங்குவார்கள் என்றால் சரிதான். ஸ்தல ஆய்வு செய்யும் போது எவ்வளவு உயரத்திற்கு கம்பம் மற்றும் மின் இணைப்பு வையர் ஆகியவை தேவைப்படும் என்று பட்டியல் தயார் செய்வார்கள் என்றால் சரிதான். அதேபோல் மின்சார விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் மின் இணைப்பு தரவேண்டிய இடம் அமைந்துள்ளதா என்று சரிபார்ப்பார்கள் என்றால் சரிதான். இதில் ஆட்சேபனை இருந்தால் மின் வாரிய துறையினரின் உயர் அதிகாரிகளுக்கு ஆட்சேபனை

தெரிவிக்கலாம் என்றால் சரிதான், நாங்கள் மின் இணைப்பு பெற்றபோது அவ்வாறு யாரும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

3) எங்களுக்கு 1985ல் என் மாமியார் மாதம்மாள் பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டது. 4 முதல் 7 பிரதிவாதிகளை பொறுத்தவரையில் மின் வாரிய துறை விதிகளுக்குட்பட்டு தான் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவுப்படி செயல்பட 4 முதல் 7 பிரதிவாதிகள் தயாராக உள்ளனர் என்றால் எனக்கு தெரியவில்லை.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.